# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 09 | தமிழ்மொழியும் இலக்கியமும் – I,II | நேரம்: 2.30 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி -I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. “சீதள கங்கையெனும் பேராறு ஓடிக் கொண்டிருந்தது” இங்கு “சீதளம்” என்பது,
    1. நீளம் 2. அகலம் 3. ஊற்று 4. குளிர்ச்சி

02. “கண்ணனின் பாதபங்கயம் ஆன்ம விடுதலையைத் தருவது” “பங்கயம்” என்பதன் ஒத்த சொல்,
    1. சூரியன் 2. தாமரை 3. இலக்குமி 4. சந்திரன்

03. அநபாயச்சோழன் தர்மநெறி வழுவாது ஆட்சி செய்தான். “தர்மம்” என்பதன் எதிர்ப்பதம்,
    1. நீதி 2. செங்கோல் 3. அதர்மம் 4. நேர்மை

04. தென்னையின் பிஞ்சு குரும்பை என்பது போல பலாவினது பிஞ்சு,
    1. வடு 2. பழம் 3. மூசு 4. சுளை

05. பசு மேய்ப்பவன் ஆயன் என்பது போல விமானம் செலுத்துபவன்,
    1. மீகாமன் 2. சலசன் 3. பாகன் 4. மாலுமி

06. சிரிப்பு, ஆபரணம், பல் எனப் பலபொருள் குறிக்கும் ஒரு சொல்,
    1. மலை 2. நகை 3. அருவி 4. முறுவல்

07. பின்வருவனவற்றில் கூட்டுப் பெயராக அமைவது,
    1. முதலீடு 2. அறிவாளி 3. புத்திசாலி 4. நோயாளி

08. வேம்பின் விதை கொட்டை என்பது போல கடுகின் விதை,
    1. முத்து 2. விதை 3. மணி 4. பருப்பு

09. முதலாம் எழுத்து ஒன்றி வரும் அணி,
    1. மோனை 2. எதுகை 3. சிலேடை 4. மடக்கு

10. பின்வருவனவற்றுள் செயப்பாட்டு வினையாக அமைவது,
    1. ஆசிரியர் பாடத்தைக் கற்பித்தார். 3. மாலா நடனம் ஆடினாள்.
    2. பாலன் பாலைக் குடித்தான். 4. மாணவனால் கட்டுரை எழுதப்பட்டது.

11. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையாக வருவது,
    1. விமலன் பந்தை எறிந்தான். 3. விமலா துள்ளினாள்.
    2. கமலன் பால் குடித்தான். 4. கமலா பாடினாள்.

12. “பறவைகள் கூட்டிற்கு வந்து சேர்ந்தது” இவ்வாக்கியத்திலுள்ள வழு,
    1. பால்வழு 2. திணைவழு 3. காலவழு 4. எண்வழு



kalvi.lk

13. ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா
1. பவளவிழா 2. வைரவிழா 3. பொன்விழா 4. மணிவிழா

14. உச்சி குளிர்தல் எனும் மரபுத் தொடரின் பொருள்,
1. தலை ஈரமாதல் 3. திருப்தி அடைதல்
2. மிக்க மகிழ்ச்சி அடைதல் 4. வெட்கமடைதல்

15. அ + புத்தகம் = அப்புத்தகம் என்பதில்,
1. வல்லினம் மிகுந்துள்ளது. 3. இயல்பாகப் புணர்ந்துள்ளது.
2. மெல்லினம் மிகுந்துள்ளது. 4. இடையினம் மிகுந்துள்ளது.

16. இராமனது புத்தகம் இது,
1. வினைச்சொல் 3. தற்கிழமை
2. வினையாலணையும் பெயர் 4. பிறிதின் கிழமை

17. பொருட்டு, நிமித்தம் என்பவை,
1. மூன்றாம் வேற்றுமை சொல்லுருபு 3. நான்காம் வேற்றுமை சொல்லுருபு
2. இரண்டாம் வேற்றுமை சொல்லுருபு 4. ஐந்தாம் வேற்றுமை சொல்லுருபு

18. மணி மணியாக என்பது,
1. அடுக்குத் தொடர் 3. இரட்டைக் கிளவி
2. அடுக்கிடுக்குத் தொடர் 4. இணைமொழி

19. ஏழை விவசாயி.................................. உழைத்த பணத்தால் முன்னேறினான்,
1. பெருகப் 2. ஓடிஓடி 3. சிரித்துச் சிரித்து 4. சிறுகச் சிறுக

20. பின்வருவனவற்றில் எதிர்ப்பொருள் தரும் இணைமொழி,
1. அமளி துமளி 3. போற்றிப் புகழ்ந்து 2. ஆற அமர 4. அல்லும் பகலும்

21. Sting என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்,
1. வயிறு 2. கொடுக்கு 3. நெஞ்சறை 4. இருத்தல்

22. காந்தன் திருவாசகத்தை உணர்வுமிக ஓதினான். இங்கு வந்த அடைமொழி,
1. எழுவாய் அடைமொழி 3. பயனிலை அடைமொழி
2. செயப்படுபொருள் அடைமொழி 4. பெயரடைமொழி

23. பொசு பொசு என்பது
1. இணைமொழி 3. அடுக்குத் தொடர்
2. இரட்டைக்கிளவி 4. அடுக்கிடுக்குத் தொடர்

24. குற்றவாளியைக் கண்ட இடத்தில் கைது செய்யுமாறு நீதிபதியால் ........................ பிறப்பிக்கப்பட்டது.
1. பிடியாணை 2. அழைப்பாணை 3. கட்டளை 4. பணிப்பு

25. பின்வருவனவற்றுள் சரியான சொல் வடிவத்தைத் தெரிவு செய்க.
1. கலாச்சாரம் 2. பிரச்சனை 3. மகளீர்கல்லூரி 4. கலாசாரம்

26. மாரியின் கண் மழை என்பது எத்தனையாம் வேற்றுமைப் பொருள்,
1. இரண்டாம் வேற்றுமை 3. ஐந்தாம் வேற்றுமை
2. மூன்றாம் வேற்றுமை 4. ஏழாம் வேற்றுமை

27. பின்வருவனவற்றுள் "விறல்" என்பது குறிக்கும் சொல்,
1. தந்திரம் 2. உற்சாகம் 3. மந்திரம் 4. வெற்றி

28. "அலைமோதும் போதே தலை முழுகு" இப்பழமொழி விளக்கும் கருத்து,
1. அளவு கடந்த கற்பனை கூடாது
2. சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது
3. வறுமையிலும் செம்மை
4. விடாமுயற்சி பயன் தரும்

29. முடிக்கும் சொற்களைப் பூர்த்தி செய்க.
....................... தெய்வமே துணை
1. திக்கற்றவனுக்கு
2. அகதிக்கு
3. கல்லாதவனுக்கு
4. கோழைக்கு

30. சித்திரமும் கைப்பழக்கம் .....................
1. முதிர்ந்த அறிவு வேண்டும்
2. செந்தமிழும் நாப்பழக்கம்
3. எத்திசையும் புகழ் பரப்பும்
4. கற்றால் அறிவு மிகும்

( 30 x 1 = 30 புள்ளிகள்)

## பகுதி - II

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 150 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக.
1. வீட்டுத் தோட்டப் பயன்பாடுகள்
2. நூலகப்பயன்பாடும் மாணவர் மேம்பாடும்
3. மரம் நட்டு வளம் காப்போம்
4. மலைநாட்டு அழகுக் காட்சிகள்

(15 புள்ளிகள்)

02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 75 சொற்களில் அமையுமாறு எழுதுக.

"உயிரைக் குடிக்கும் கொரோனாவை (Covid–19) இல்லாது ஒழிப்போம்" என்ற தொனிப்பொருளில் அமையும் துண்டுப்பிரசுரம்.
அல்லது
உமது வகுப்பினால் வெளியீடு செய்யப்படும் கையெழுத்துச் சஞ்சிகை தொடர்பான விளம்பரம்.

(10 புள்ளிகள்)

03) பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டுள்ளன என்பதை எழுதுக.
1. "நீ மகிழ்ச்சியாக இருப்பது பற்றி எனக்கு மகிழ்ச்சியே"
2. "அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும் வஞ்சியனையார் மணிநடையும் விஞ்சியது காணப்பிடித்தது காண்"
3. "மகளே, சகுந்தலை இதோ உன் தந்தை நிற்கிறார் அவரை வணங்குவாயாக"
4. "யாருக்கு வெற்றி உனக்கா? பூச்சிக்கா?"
5. "நான் இஞ்சை இருக்கிறது என்ரை மோனுக்கும் புடிக்குதில்லை"

(15 புள்ளிகள்)

04) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"சீதமதிக் குடைக் கீழ்ச் செம்மை அறங்கிடப்பத், தாதவிழ் பூந்தாரான் தனிக்காத்தான் - மாதர் அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும் ஒரு கூட்டில் வாழும் உலகு"
1. இப்பாடலில் யாருடைய சிறப்புக் கூறப்பட்டுள்ளது?
2. ஒற்றுமையுணர்வு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
3. "தாதவிழ் பூந்தாரான்" என்பதன் பொருள் யாது?
4. சீதம், அறம், தார் என்பவற்றின் பொருள்களைத் தருக.
5. இப்பாடல் இடம்பெறும் நூல் யாது?

(10 புள்ளிகள்)


kalvi.lk

05) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ரோஜா தன்னைக் கவிஞர்கள் பாடுவதற்குக் காரணமாகக் கூறியவை எவை?
2. இனியவை கூறலென்றால் என்ன?
3. எறும்புக் கூட்டத்தில் எத்தனை வகைகள் உள்ளன?
4. எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது என்பதற்கு ஔவையார் காட்டும் உதாரணங்கள் எவை?
5. பிசிராந்தையார் எனும் புலவரின் இயல்புகள் எவையெனக் கூறப்பட்டுள்ளன?

(10 புள்ளிகள்)

06) பின்வருவனவற்றில் இடம்பெறும் அணிகளை இனங்கண்டு எழுதுக.

1. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு
   வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்
2. குதிரை காற்றிலும் வேகமாகப் பாய்ந்து ஓடியது.
3. வதனமதி பூத்த...........................
4. குவளை மலர் போன்ற விழிகள்
5. பருத்திப் பூவைப் போல பதியுது உன்பாதம்

(5 x 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457